



ஓலை 68 | ஓசை 189 | ஏப்ரல் 2024

# அகர முதல இலக்கியப் பேரவை



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

முகத்தான் அமர்ந்தின்து நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்

## பொருள்

பிறரைப் பார்க்கும்போது முகத்தால் விரும்பி, இனிமையாகப் பார்த்து, உள்ளத்துள் இருந்து வரும் இனிய சொற்களைச் சொல்வதே அறம் ஆகும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கிய பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## நிர்வாகக் குழு

**கு.செல்வமுத்துகுமரன்**

## ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

## வடிவமைப்பு

**ச.சூர்யா & அ.வில்சன்**

## அலுவலக முகவரி

**97, குஞ்சிதபாதம் நகர், டவுன்ஸ்டேஷன் தென்புறம்,**
**மயிலாடுதுறை-609001.**

# நாக்குமொரு போர்க்கருவி

பா வகை : அளடியும் குறளடியும்
வருகிற நாலிரு சீரிரட்டை
வியனிலைச் சிந்து

நாக்குமொரு போர்க்கருவி நன்றாய் உணர்ந்திடுநீ - அதை
நயம்பட போற்றிடுநீ
ஆக்கத்தின் வழி நின்றே அணைத்திடு சுழற்றிடுநீ - நாவை
அரணாய் கொண்டிடுநீ

நன்மையும் தீமையும் நாட்டினில் விழைவதும் - நாவாலே
நவின்றிடும் சொல்லாலே
வென்றிடச் செய்யும் வீழ்த்திடச் செய்யும் - உதிர்க்கும்
விதையாய் சொற்களுமே

தூவிடும் சொல்லில் துளிர்க்கவும் கூடும் - உறவு
துண்டித்தும் போகும்
நாவினை ஆள நடைகளும் பயின்றிடுநீ - அங்கே
நாவடக்கம் பழகிடுநீ

போர்க்கருவி நாவும் புறப்படும் விரைவாய் - வார்த்தையை
பூட்டிடு பக்குவமாய்
சீர்தரும் சொற்களை சிறப்புடன் பேசிட - வாழ்வும்
சிறக்குமே என்றென்றும்

கவிஞர் பூர்ணிமா சங்கர், கோயம்புத்தூர்



மலைக்கும் கடலுக்குமாய்
தூரம் தாண்டுகிறது
நதி.
/
ஓடும்நதியில் விழுந்த
சருகினைப் பரிதாபமாய்
வழியனுப்புகிறது சருகுதிர்த்த மரம்.
/
வேலித்தாண்டிய பூங்காற்றை
எதுவும் செய்வதில்லை
மரங்கள்.
/
அவள் என் மடிசாயும் தருணம்
மேகத்தில் முகம்
மறைத்துக் கொள்கிறது நிலா.
/
கிழிந்தது
மண்ணின் முகத்திரை.
கீழிறங்கியது தூறல்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# சுண்டைக்காய் கால் பணம்



தேசத்தில் பணம் கொழிக்கிறது
பாலும் தேனும் ஓடுகிறது
இட்லி நாற்பதுக்கும்
குடிநீர் நூறுக்கும் விற்றுத் தீர்கிறது

மொத்தமும் மூப்படைந்து உழல்கிறது
அடுப்பில் பூனை சயனிக்கிறது
உணவு சமைக்க ஏலவில்லை
உண்பது மட்டும் குறையவில்லை

சுண்டைக்காய் கால் பணம்
சுமப்பதற்கு முக்கால் பணம்
அன்றே சொன்னார் அறிவுடையார்
இன்றைய தலைமுறை அறிவிலார்

சோறு கால் பணம்
சோற்றை சுமக்க முக்கால் பணம்
வியாபாரி இல்லை இவன்
வெறும் டெலிவரி பாய்

நீ என்ன சாப்பிட வேண்டும்?
எவனிடம் வாங்க வேண்டும்?
எல்லாம் தீர்மானிப்பது இவன்
தேடுபொறி ஆஃப்டிமைசேஷன்

வாரத்தில் எத்தனை இட்லி?
எத்தனை தோசை?
சைவமா? அசைவமா?
என்றைக்கு சைவம்? என்றைக்கு அசைவம்?
எல்லாம் தெரியும் அவனுக்கு

வியாபாரியும் ஏமாறுகிறான்
வாங்குபவனும் ஏமாறுகிறான்
அலுவலகம் இல்லை அட்ரஸும் இல்லை
ஆனந்தமாய் கொழிக்கிறான்

ஆனாலும் நேர்மையானவன்
சமயத்தில் தரத்தை சோதித்த பின்பே
உனக்கு சாப்பிட தருவான்
தாயினும் மேலானவன்

பங்கு சந்தை பட்டியலில்
பலகோடி இலாபத்தில்
என்ன குறை தேசத்தில்?
வளர்க பக்கி! வளர்க தக்காளி

கவிஞர் முனைவர் கதிர்வேல் தனியரசு, திருச்சி

# பெண்ணாய் ஒரு பிறப்பு வேண்டும்



என்னை ஈன்ற பொழுது பெற்ற
தாயின் பெருவலி.

தட்டி கொடுத்து ஊக்குவிக்கும்
சகோதரியின் பாசம்.

தோள் கொடுத்து தூக்கி விடும்
தோழியின் நேசம்.

அன்பிற்கு எல்லை இல்லா
காதலியின் காதல்.

நல்உறவில் நலம் காணும்
மனைவியின் அரவணைப்பு.

வாழ்நாளின் உன்னதம் உணர்த்தும்
மகளின் அன்பு.

இத்தனையும் இவர்களிடம் கிடைத்து
மனம் மகிழ்ந்தாலும்.

பெற்றதெல்லாம் கொடுத்து மகிழ்ந்திட;
பெற்ற புண்ணியம் திருப்பி தந்துவிட;

பெருமை கொண்ட இந்த பூமியில்,
பெண்ணாய் ஒரு பிறப்பு வேண்டும்.

கவிஞர் ஆனந்த் குவை. ஜெயராமன், சேத்தியாத்தோப்பு

**1.ஞானம்**

ஞானம்
தெளிந்த அறிவு
ஐம்புலன் அடக்க அறிவது
ஆழ்மன அமைதி தந்திடும் பேரின்பம்,
முற்றறிவு.

**2.தென்றல்**

தென்றல்
வெற்றிடம் நிரப்பி.
உயிருக்குள் உயிராய் இருக்கும்
தண்ணென்று வீசி உடல் தழுவும்,
கால்

**3.திறமை**

திறமை
உள்பொதி ஆற்றல்
முயன்றால் வெளியே வரும்.
வளத்தோடு  இசை பெற வாழும்,
திறன்.



**4.பூக்கள்**

பூக்கள்.
ஒருநாள் வாழ்வு
மலர்ந்தால் மணம் வீசும்
தேனீக்களுக்கு விருந்து,
மனிதர்க்கு மருந்து,
மலர்.

கவிஞர் செ. கலைவாணி, மேட்டூர்அணை

# முள்ளில் மலர்ந்த இதயம்

குத்திக் கிழித்ததே ஏளனப் பேச்சு
விட்டுப் பறந்ததே உறவுகள் எல்லாம்
தட்டி விழுந்தவள் தடுமாறி எழுந்தேன்
உதிரங்கொட்ட உயிர் உருகி நின்றேன்
எட்டுத் திசையும் எட்டிப்பார்கிறதே தனிமை
எட்டா தூரத்தில் இதயம் உடைத்தபடி
கத்தி கதறி அழுத்து போனதே
கத்தியின் காயமும் மரத்துப் போனதே
கண்ணாடி மாளிகையில் இதயம் காத்தேன்
சொல்லெடுத்து வந்து கல்லெறிந்து உடைத்தீரே
மிதக்க மிதக்க வலிக்கும் முள்ளிடம்
அன்று ஒப்பந்தம் போட்டு வந்தேன்
செங்குருதியில் உன் பசி தீர்கிறேன்
பிணைப்புகளிலின்றி இதயம் ஒட்டி வருகிறேன்
முட்களால் காவல் வேண்டும் என்று
முள்ளில் மலர்ந்த என் இதயமே
உன்னில் விளையாட்டு இனி கடினமே
எடுப்பதற்கும் வழியில்லை
உடைப்பதற்கும் வாய்ப்பில்லை
பத்திரமாய் பதுங்கிக்கொள்வோம்
முட்களின் வேலிகளில்



கவிஞர் அபிதா, மூணாறு (கேரளம்)

# யாசகத்தின் பிறப்பு

பனிக்குடம் உடைந்து
வெளிவரும் குழந்தைக்கு தெரியாது
இருவரையும் இழந்து
தனிமையில் கிடப்போமென
இன்று தீண்ட தகாத
உபாதைகளில் புரளும் பொழுதெல்லாம்
சீண்டிக் கொள்ள யாருமில்லை
நக்கி குரைத்து கீறிச் செல்லும்
நாய்களின் வழிகளில்
நான் சற்று அழுக்காகத்தான்
பயணிக்கிறேன்
மனமில்லாத
பிச்சைக்காரர்களின் வீதியிலே
வெளிச்சமிட்டு வண்ணம் தீட்டடும்
வீதி விளக்குகள்
நிழல் உண்டு மறைந்தும் தோன்றியும்
கண்ணாமூச்சியாட.



கவிஞர் சே. கார்கவி கார்த்திக்

# பொய்க்கால் குதிரை

கண்ணைப் பறிக்கும்
வண்ண வண்ண ஆடைகட்டி
ராஜா ராணி போல வேடமிட்டு!
கட்டைக்காலில் நிஜக்காலை மறைத்து
குதிரையின் கூடுக்குள் உடலை
நுழைத்து! நையாண்டி
மேளத்திற்கு ஏற்ப
திருவிழா கூட்டத்தில் ஆட்டம்
போடும் எங்கள் பிழைப்பு!
காலத்திற்கேற்ப காட்சிகள்
மாறிப் போக!
கைதூக்கி விட யாருமில்லாமல்
நொண்டி அடிக்கும் எங்கள்
தேய்ந்து போகும் கலையை
நம்பி எங்கள் வாழ்க்கை!
அதை வாழ வைக்க வழியில்லையே!



கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை 119

# இனியொரு விதி செய்வோம்

இங்கே எல்லாம்
எல்லாருக்கும் கிடைத்திடவே
இறைவன் உலகின்
எல்லாவற்றையும் படைத்தான்.

மழை பெய்வதோ
மக்கள் அனைவருக்கும்
ஆதவனின் கதிர்களை
ஆள்வோரால் மறைக்கலாகாதே.

நீதியும் நியாயமும்
நீங்கள் உருவாக்கியதை
நல்லவருக்கும் கெட்டவர்க்கும்
நல்லமுறையில் பகிர்ந்திடவே.

அன்றாட வாழ்வியலில்
அரங்கேறும் காட்சிகளில்
அரசனுக்கோர் நீதி
ஆண்டிக்கோர் சட்டமே

இனியொரு விதி
செய்வோம் வித்தியாசமேயின்றி
எல்லோரும் எல்லாம்
பெற்றிட நாமே

பசுமைப் பரட்சி
பாங்குடன் கொணர்வோமே



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# மேகம் கருக்குதய்யா

மேகம் கருக்குதய்யா
மின்னிமழைப் பெய்திடுமா

கெணறெல்லாம் வத்திடிச்சே
நெலமெல்லாம் தரிசாச்சே
புல்பூண்டும் மொளைக்கலியே
பூமியும் வெடிப்பாச்சே

கானல்நீரும் உண்டாச்சே
கனவாகிப் போயாச்சே
நாக்கும் வறண்டுடிச்சே
தாகமும் உண்டாகுதே

தண்ணீருக்குத் தவிக்கிறோம்
கண்ணீரும் வருகுதய்யா
காசுபணம் சேந்தாச்சு
காடெல்லாம் வீடாச்சு

கழனியெல்லாம் கட்டாந்தரையாச்சு
விவசாயத்தை மறந்தாச்சு
இயற்கையும் மறைஞ்சிடுச்சு
பசுமையும் மாயமாச்சு

குடிநீரும் கெடைக்கலியே
சீவராசிகள் தவிக்குதே
எங்கும் பட்டமரம்
கண்ணீரும் வந்திருச்சு



குளமும் காய்ஞ்சிடுச்சி
கும்மாளமும் போயாச்சு
நிலைமையும் மாறிவிடுமோ
நிம்மதியும் வந்திடுமோ

மேகம் கருக்குதய்யா
மின்னிமழை பெய்திடுமா
வாட்டமும் போயிடுமோ
பயிறும் செழுத்திடுமோ

ஏரோட்டம் நடந்திடுமோ
எல்லாமும் கிடைத்திடுமோ
மக்கட்பசித் தீரட்டுமே
மகிழ்ச்சியும் மலரட்டுமே.

*கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்*

# கைவிடப்பட்ட பூத்தொட்டி

வீட்டின் முன்றில்லில் தொங்கிய பூத்தொட்டிகளில்
வீட்டின் கதவருகே தொங்கிய தொட்டியில்
வீட்டுக்குருவி யொன்றதன் இனம்பெருக்க நல்ல
வாய்ப்பெனக்கருதி அத்தொட்டியில் வருவிருக்கு மதனருமை
வம்சத்திற்கு கூடொன்று அமைத்து முட்டையிட்டு
அம்சமாய் அதனுள் தானமர்ந்து அடைகாத்தது;
அடைகாக்கும் அதன்பொறுமை கண்டு அடியேனும்
ஆனந்தம் மிகக்கொண்டு இளங்குஞ்சு காணவே
பரபரத்த எந்தனிதயத்தைப் பொறுமையுடனிரு வெனவடக்கி
பார்த்திருந்தேன் அக்கூட்டை என்றுவரும் அக்குஞ்செனவே!

பங்குனி முடியும் நாளிரவில் பத்துப்பாத்திரம்
பத்திற்குள் இருக்கச்சலவை யியந்திரத்தை ஓய்வெடுக்கவிட்டு
பத்தாக மணியாகும்முன் அலசியவேளை அலறியகுருவியால்
பம்பரமாய்ச் சுழன்றெந்தன் பத்தினியும் முன்றிலடைந்திட
பரிதவித்தே அலறினாள்குருவிக் கூட்டினருகில் கதவில்
தொங்கியவோர் காட்டுப்பூனையின் களவுத்தனம் கண்டே!



குரோதி பிறக்கிறதென்று யாரதற்குச் சொன்னார்களோ,
குரோதம் குருவியோடு என்றுமுண்டு என்றுரைத்தவப்
பூனை புத்தாண்டு பிறக்குமுன் அதைக்கொண்டாட
பிடித்த விருந்தாய்க் குருவியின் முட்டைகளை
உண்ணக்கண்டதை அடித்துவிரட்டி அரட்டினாளென் ஒருபாதி
உறைபவள்தன்னுள் ளம்நொந்துகொல்வே னந்தபூனை யையென்றே!

அடியேனன்று நினைத்தது நடந்தே விட்டது;
ஆயினும் குருவிக்காக அழுதிடும் மனைவியை
எண்ணிப் பெருமையாய் இருந்தாலும் பாவமந்தபூனை
எனயெந்தன் அறிவொருபுறம் சொல்ல சிபிமன்னன்போல்
தீர்ப்புரைக்கும் வன்மையற்ற எளியேனெதற்கு இரங்குவேனோ?

ஒன்றையொன்று அழித்துவாழ்வதே வாழ்வென ஆனபின்பு
நன்றெதுதனக்கு எனத்தன்பாது காப்புக்கருதா எவ்வுயிரும்
கொன்றழிக்கப்படும் என்பதால்தக்க அரணமைத்தலே அறிவெனவறிக!

குறள் 743:

உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்

*கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாச்சலம், கோவில்பட்டி*

# மனதின் விசித்திரங்கள்


எதிர்பார்ப்புகள் இடறும் போது
விழுங்க இயலாத
கசப்பு மருந்தென
எதிர்மறைகளை
வாய் முழுக்க நிறைந்து விடுகிறது
இயற்கை

தோல்விகளின் எதிர்ப்பாடுகளை
பெரிய இழப்பாக
நினைக்கச் செய்கிறது உலகம்.
உண்மையில்
தோல்வி கற்றுக் கொடுக்கும் பாடம்
வாழ்க்கை முழுக்க
வாழ்க்கைத் துணை போல்
கூடவே வந்து கொண்டிருக்கிறது.

வெற்றி தரும்
நிமிட நேரத்து சந்தோஷங்கள் யாவும்
சிரித்து முடித்த பின்
எழும் வெறுமையைப் போல்
விலகி மறைந்து விடுகிறது
வெகு சீக்கிரம்.

தோல்விகளைப் புரிந்து கொண்டு
ஏற்று பயணிப்பவர்கள்
அமைதியாகிறார்கள்.

தோல்வியின் தரிசனத்தில்
மனதில் உண்டாகும்
விசித்திரங்கள் எப்போதும்
புதிதானவை
புதிரானவை



கவிஞர் ஸ்ரீநிவாஸ் பிரபு

# தானம் செய்வோரைத் தடுத்து நிறுத்தாதே

உலகத்தில் சிறந்த ஒன்று தானம்
இல்லாதவருக்கு கொடுத்து
இன்பம் கண்டு மகிழ்தல் ஆகுமே

யாசகம் கேட்பவரை
இல்லை என்று சொல்லி விரட்டாதே
கொடுப்பவன் வாழ்வு ஒருநாளும் குறையாது

உதவி செய்யும் மனம் இருந்தால்
உலகத்தைக் கூட வாங்கலாம்
தானம் செய்வதால்
உனக்கு ஒரு குறையும் வராது



உன் குடும்பம்
வாழையடி வாழையாக வாழும்
இறைவன் தானம் செய்பவரை பார்த்தால்
தானே இறங்கி வந்து ஆசிர்வாதம் கொடுப்பாரே

தானத்தில் சிறந்தது அன்னதானம் ஆகுமே
சங்க காலத்தில் புலவர் பலர் சிறந்து விளங்கினாரே
மனம் மகிழ்ச்சியடைய தானம் செய்து பார்

நோய் நொடி உன்னை வந்து சேராது
இருக்கும் நாளில் தானும் மகிழ்ந்து
மற்றவரையும் மகிழ்வி

இருக்கும் ஏழைகளை கண்டறிந்து
அவர்களுக்கு உதவிடு
உன் வாழ்வு சிறப்பாக அமையுமே

கவிஞர் ம. ஜெ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

# வேனிற் காலம்

பின்பனி ஓய்வெடுக்க
மெல்ல அரும்பும் இளவெனில்!
வேனில் நுகர்ந்த காற்று
ஈரம் இல்லாமல் வாட!
பனி நனைத்த பரப்பில்
இலை உதிர்க்கும் மரம்!
மஞ்சள் பூக்கள் சிரிப்பில்
மனதை தைத்த மங்கை!



கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# மணிமேகலை (ஒன்பது)

8. மணிபல்லவத்துத் துயருற்ற காதை :

1. மணிபல்லவத் தீவில் மணிமேகலை :
பனி மலர்ப் படுக்கையில் மணிமேகலை விழித்தெழுந்தாள்.
தனித்து இருப்பதை உணர்கிறாள், சூரியன் மட்டும் வானத்தில்
"மனிதர்களே இல்லாத இடமா, எதிரே நீலநிறப் பெருங்கடல்
இனிமை தோழி சுதமதி, அன்னை மாதவி இவர்கள் எங்கே?"
"இந்த இடம் உவவனத்தின் ஒரு பகுதியா? தெரியவில்லையே
எந்த நேரமும் பிரியாத சுதமதி எங்கு சென்றாய். அஞ்சுகிறேன்
அந்த அணியிழை ஏதேனும் வஞ்சகம் செய்தாளோ? அறியேன்
வந்ததே இரவும் என் செய்வேன்" மணிமேகலை புலம்பினாள் .
( அணியிழை ; மணிமேகலா தெய்வம் )

2. மணிமேகலை தீவில் சுற்றித் திரிந்தாள் :
அலைகளில் தவழ்ந்து செல்லும் பறவைகள் கண்டாள்
கலை நயத்துடன் நீரில் குதித்து மீனுடன் பறக்கும் பறவைகள்
நிலைக்கொள்ளாத சில்லைகள் ஆர்ப்பரித்து பறக்கின்றன
மலை மீது இருப்பது போல் வீற்றிருந்தது அன்னச் சேவல்

3. தந்தையை நினைத்து அழுதாள் :
பாங்கியர் யாரும் இல்லாததை நினைத்து அழுதாள்
தாங்கவொண்ணா துயரத்தில் தந்தையின் ஞாபகம்
நீங்காத நினைவாக இருந்தது தந்தையின் மரணம்
ஏங்கியது மனம்,"மீண்டும் காண்பேனா தந்தையை?"




4. புத்த பீடிகை :
இப்படி அழுகின்றவள் முன்னால் புத்த பீடிகை தோன்றியது .
அப்படி ஒரு ஒளிக்கற்றைகளை பரப்பிக் கொண்டிருந்தது
தப்படி பிசகாமல் செதுக்கப்பட்ட சதுரமான பளிங்கு பீடம்
பத்தடி உயரத்தில் புத்தனின் பாதங்கள் அமைந்திருந்தன
சுற்றிலும் நறுமலர்களைச் சொரியும் மரங்கள் இருந்தன
பற்று அறுத்த பரம புத்தனின் பீடிகை அல்லவா அது
சுற்றும் பறவையும் அவ்விடம் பறந்து சிறகொலி செய்யா
முற்றும் துறந்த முனிவனின் மாணிக்க ஆசனம் அது

எங்கும் ஒளி வீசுகின்ற அஃது அறத்தன்மை பொருந்தியது
தங்குதடை இன்றி காண்போர் பழம்பிறப்புகள் அறியலாம்
சங்கநாத ஒலி எப்பொழுதும் ஒலித்துக் கொண்டே இருக்கும்
பங்கயப்பீடிகை கண்ட மணிமேகலை திகைத்து நின்றாள்
(பங்கயப்பீடிகை : புத்தரின் பாதங்கள் அமைந்த பதுமபீடம் )

...தொடரும்

கவிஞர் ந. திருக்கோமு

# முத்தமிழ் பேசும் அழகி இவள்

முத்தமிழ் பேசும் அழகிய இவள்
முத்தான மூத்த புதல்வி இவள்

நித்தம் திமிரோடு நடமாடும் பிராணி
காயங்கள் கண்டு கலங்கிடாத மேனி

வலிகள் வந்தாலும் வழி கடந்து போவாள்
விழிகள் மயங்கினாலும் விடை சொல்லி நகர்வாள்

ஆறுதல் என்ற அனுதாபம் தேவையில்லை
முகத்தை தடவி முதுகில் குத்தும் எண்ணம் இல்லை

தைரியம் தானாகவே பிறந்தது
தாய்ப் பாசம் முழுமையாய் நிறைந்தது

உதவி என்று தலை குனிந்தது இல்லை
உதவாமல் போனால் இவளுக்கு உள்ளம் நிறைந்ததே இல்லை

இவளை போலும் வாழலாம் தன்மானம் இழக்காமல்.



கவிஞர் சாதீக் பாத்திமா சமீஹா, மூதூர் (இலங்கை)

# வாழ்வின் வரிகள்

வாழ்க்கை நதியில்
கரை காண்பதென்னவோ
எண்ணிச் சிலர் தானிங்கு!

கரை கடந்து ஓடுகிறது
சிலர் வாழ்வில்
விதி எனும் வேடிக்கை!

விழி மூடி வழிமாறி
கரை காணா கடலில்
சங்கமமாகும் சிலர் வாழ்வு!

தட்டுத் தடுமாறிக்
கரையொதுங்கும்
குற்றுயிராய் சிலர் வாழ்வு!

அழுத நாட்களை
மீட்டிச் சிரிப்பதும்
சிரித்த நாட்களை நினைத்து
அழுவதுமாய் சிலர் வாழ்க்கை!

தட்டி விட்டவர்களையும்
தட்டிக் கொடுத்தவர்களையும்
எண்ணச் சிறையில்
மீட்டி மீட்டி கடந்து போகும்
அனேகர் வாழ்க்கை!

சூழ்நிலைகள் மாறும்
அவ்வப்போது நொடிப்பொழுதில்
சிலர் வார்த்தைகள் மாறும்.
சிலரது வாழ்க்கையும் மாறும்!

அடுத்த நொடியில்
இறந்து போகும்
அழகான உறவுகள் இங்கு ஏராளம்!

சிலகாலம் சந்தோஷங்களாக.
மீதி நாட்கள் சங்கடங்களாக.
வலிகளோடு விழி நனையும்!

திரும்பிப் பார்த்து
திருத்திக் கொள்ளும் வழிகளில்
வலிகள் கடந்து போகலாம்
அல்லது தொடர்ந்தும் வருத்தலாம்!

பீறிட்டு ஓடும் நதியாய்
விதி வரைந்த வாழ்க்கை.
வலிகள் கடந்து வாழ்ந்து காட்டுவதில்
உள்ளது வாழ்வின் வெற்றி!

வாழ்ந்திடும் உலகு இன்றில்லை
வீழ்ந்திடாமல் மீண்டெழுவதில்
உள்ளது விதியை வெல்லும்
நம் வாழ்வின் மீட்சி!

கவிஞர் செண்பகச் சோலையாள், ஆயிஷ் கம்பளை

# நாட்கள்

ஒன்றாம் நாள் ஓர் அழகை கண்டேன்
இரண்டு கண்கள் என்னை கவர
மூன்றாம் நாள் அவள் முன் நின்றேன்
நான்காம் நாள் என் கால்கள் நாட்டியம் ஆட
ஐந்து விரல்களை அவளுடன் கோர்க்க நினைத்தேன்
ஆறு அடி அழகை கண்டு.
ஏழாம் நாள் என்னவளை எட்டிப்பிடித்தேன்
எட்டாம் நாள் என்னவள் என்னுடன் நடந்தாள்
ஒன்பதாம் நாள் ஒரு மனம் ஆனோம்.
பத்தாம் நாள் அவள் பறந்து போனாள்
நான் இறந்து போனேன்.



கவிஞர் சிபியோன் ஜோஷ். ர, மறையூர் (கேரளம்)

# சித்திரை ஏரின் சிறப்புகள்!

அறிவியல் சார்ந்த வானிலைக் கணிப்புகளில்
சிறப்புடன் திகழ்ந்தனர் பண்டைத் தமிழர்கள்!
வருடங்களை அறுபதாகக் கணக்கிட்ட தமிழர்கள்
வருடத்தின் துவக்கமாக சித்திரையைக் கொண்டனரே!
கதிரவன் நேர்கிழக்கில் உதிக்கின்ற நாளாகும்
சித்திரையின் முதல்நாள்! வடகிழக்குப் புள்ளியில்
உதிப்பது ஆடிமாதம் ஒன்றாம் நாள்! மீண்டும்
நேர்கிழக்கில் கதிரவன் ஐப்பசி ஒன்றினிலே!
தென்கிழக்கில் உதிப்பது தைத்திங்கள் ஒன்றினிலே!
இந்நான்கு மாதங்களில் பண்டிகைக் கொண்டாட்டம்!
பொன்னேர் பூட்டுதல் சித்திரை முதல்நாளில்!
சிலப்பதிகாரத்தில் "ஏர்மங்கலம்" இதனை உரைக்கிறதே!
கம்போடியாவில் மேழிவைபவம் சித்திரை ஒன்றினிலே!
சித்திரை பிறந்தால் உழவர்கள் நித்திரைபோய்
எதிர்வரும் ஆண்டில் என்னென்ன பயிரிடலாம்
என்பதைத் திட்டமிடத் தொடங்கிடுவர்! ஊர்மக்கள்
ஒன்றுகூடி நிலங்களின் ஈசான்ய மூலையிலே
பொன்னேர் பூட்டி உழவினைத் தொடங்கிடுவர்!
காப்பரிசி பிரசாதம் வழங்கிக் களிப்படைவர்!
சித்திரை உழவை பத்தரைமாற்றுத் தங்கமென்பர்!
சிறப்பு வாய்ந்த சித்திரையை உழவுத்தொழில்
சிறந்தோங்க வரம்வேண்டி வரவேற்போம்! வளம்பெறுவோம்!
உழுதுண்டு வாழ்வோரைத் தொழுதுண்டு பின்செல்வோம்!



கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

# மழை

மேக அன்னை
ஈன்றெடுத்த
அற்புத மகவை நீ

பாலைவனமும்
சோலைவனமாகும்
உன் வருகையிலே

விவசாயத்தின் உயிர் நீ
விவசாயிகளின்
துயர் தீர்க்கும் நண்பன் நீ

மண்ணுக்கும்
மனிதனுக்கும்
உயிர் நீயே



மேகத் தோட்டத்தில்
மலரும் மலர் நீயே

மேக மகள் மண்ணுக்கு
அனுப்பும் தூதும் நீ

நீ வரும் நாள் பார்த்து
காத்திருப்பாள் பூமித்தாய் மனம் குளிர தந்துவிடு
பசித்தோருக்கு படியளக்க மழையே மழையே வந்துவிடு

கவிஞர் ஜோ. மஞ்சு, மருங்கூர்

# பேராற்றலின் தொண்டு

சிறைப்பட்டாலும்
கறை படாமல்
அடைபட்டாலும்
உடையாமல்
காயம் பட்டாலும்
கலங்காமல்
சென்ற இடத்தை
சிறப்பிக்கும்
செம்மையானவள்
பெண்மையெனும்
மென்மையை ஏந்தியவள்

கஷ்டங்கள் எல்லாம்
கற்கண்டு
நஷ்டங்கள் எல்லாம்
பொற்கூண்டு
பொறுமையைப் புயங்களில்
ஏந்திக்கொண்டு
புறப்பட்ட தேவதையோ
புண்ணியத்தின் செண்டு
பிறப்பு முதல் இறப்பு வரை
அவள் புரிந்திடுவாள்
பேராற்றலின் தொண்டு!



கவிஞர் மரு. ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# ஆடூர் கொடை வள்ளல் சபாநாயகர் பிள்ளை

கேள்விச் செல்வத்தை
வாரி வழங்கும் கல்விக் கூடம்
ஆடூர்பள்ளி
வேள்விப்பயன் அடைந்தது
தோல்வியின் அறிகுறி
தங்களால் நீங்கியது
காண்பவரின் நெஞ்சங்களில்
வியப்புக்குறி தாங்கியது
சேவைகள் பலவும்
தொடர்வதைச் சொல்லி
முப்புள்ளிகள் தொடர்வதைக் கண்டு
முற்றுப் புள்ளியும் சற்றே ஏங்கியது
அறிவியல் கருவிகளும்
சோதனைகள் புரியுது
முடங்கிக் கிடந்த கணினிகளும்
முழக்கம் இட்டு இயங்குது
கலங்கரை விளக்கமாய்
வளமான கரங்களால் நலங்களை
வாரி வாரி வழங்குவீர்.
செல்வமும் செல்வாக்கும் தங்கள் பலம்
உடைமையாய் அடைய வேண்டும்
நல்ல உடல்நலம்

காணும் இடமெல்லாம்
தங்கள்காட்சி தெரியுது
அனைத்துப் பெருமைகளும்
உங்களுக்கே உரியது
கல்வியைக் காக்கும் ஈசனே
உதவிக்கரம் நீட்டும் நேசனே
நாளைய வரலாறு உம்புகழ் பேசுமே



கவிஞர் குரு. ஜெயந்தி, கீ. ஆடூர்

# தமிழ் காதலென்றால்

தனை பெண் பார்க்க வருவதாக
தகவல் வந்த நொடி பொழுதிலிருந்து
தன்னிலை கொள்ளாது
தவிக்கின்ற பேதையும்
தன் உறவுகளோடு
தன்னவன் பெண் பார்க்க வந்த பின்
தலைமறைந்து நின்று பார்த்துட்டு
தன் தோழிகளின் கேலிப்பேச்சுக்கு
தட்டிவிட்டு கரமேந்திய குவளைகளுடன்
தலைகுனிந்து வெட்கத்துடன்
தரை பார்த்து மெல்ல நடந்து வந்து
தக்க மரியாதையுடன் பிறருக்கும்
தன்னவனுக்கும் கொடுத்திட்டு
தன் மனம் படபடக்க சில நொடிகள்
தகிக்கின்ற காதல் பார்வை நோக்கிட்டு
தலை திரும்பாமலே
தம் முகம் காட்டாமலே
தன் அறைக்குள் ஓடிச்சென்று
தக்க தேதி பெரியவர்கள் குறிப்பதை
தந்திவழி செய்தியாக படபடவென கேட்க
தரிகெட்டு அலையா வண்ணம்
தன் எதிர்கால கணவன்
தன்னை கரம்பிடிக்கும் நாள் அதையும்
தனிமையிலே எண்ணி பூத்திருக்க
தங்கத்தாலி அணியும் நாளுமே
தடதடவென கெட்டிமேளம் முழங்கி வந்திட
தன் இல்லகம் விட்டு புகுந்தகம் செல்லும்
தங்கத்தாரகையின் காதல் மண வாழ்வுமே
தப்பித்தவறில்லா மாசற்ற வாழ்வாக
தகதகவென ஜொலித்திட்டுதே பழங்காலத்தில்,
தமிழ் காதலென்றால் இதுவல்லவோ!
தற்கால காதலுமே
தடதடவென வந்திட்டு
தடம் தெரியாமல் வாழ்வை துளைத்திட்டு
தன்னை சார்ந்தவர்களையும்
தலைகுனியச் செய்திடுதே!



*கவிஞர் நீலாசுபாஷ், ஆக்கூர்*

# விவசாயி

மண்வெட்டி கொண்டு
வியர்வை துளி கொட்ட
காத்து நின்றாய்
காவிரி நீர் வருமென்று,
வந்த பின்னே
ஆனந்தம் கொண்டாய்
பச்சிளம் குழந்தைக்கு
பசியாற்றியது போல்,
பயிர் நோயுற்றால்
கலங்கி போவாய்
காரணம் கண்டு
சரிசெய்த பின்
பசுமையை பார்த்து
மகிழ்ந்து நிற்பாய்,
அருவடையின் போது
புன்னகைத்து கொள்வாய்
பிறகு
விலையின் குறைவால்
நொந்து போவாய்,
விவசாயம் வேண்டாம் என்பாய்
பிறகு காவிரி நீருக்கு கத்திருப்பாய்,
மீண்டும் விவசாயத்தை தொடர்வாய்,
உன் ரத்தமும் சதையும் குறைந்தாலும்
உன்னைவிட்டு செல்ல விவசாயத்திற்கு
மனம் இல்லையோ?.



கவிஞர் ரெ. மாணிக்கவேல், நீடாமங்கலம்

# சிரிக்கும் வியர்வை



கால் கடுக்க வேலை செஞ்சு
தலை கிறுகிறுத்துப் போய்

களத்து மேட்டுல வெச்சு
கட்டாத கூலி வாங்கையில

விடிவு வராத வாழ்க்கைய நெனச்சு
எங்க வியர்வையும் சிரிக்குதுங்க!



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி


# என்னவனின் கண்கள்

எத்தனையோ உறவுகள் கண்ட போதிலும்
ஏனோ உன் கருவிழி கண்களால்
கட்டி இழுத்தாய் என்னை.
உன் கண்களால் என்னை
சிறை அடைத்தாய்
ஆயுள் கைதியாக.

உன் கண்களை கண்ட அந்த நொடி முதல்
இன்று வரை உன் கண் என்ற போதையால்
சிக்கி தவிக்கிறேன்
சிறையில் அடைக்கப்பட்ட கைதியாக.

எத்தனையோ இன்பம் துன்பம் வந்த போதிலும்
நீ கண் இமைக்கும் நேரத்தில்
மறந்து போனதேனோ.
உன் கருவிழி கண்களால்

நீ மௌனம் காத்த போதிலும் உன்
கண்களே ஆயிரம் கதைகள் சொல்லும்
உன் சந்தோஷமும் , உன் துக்கமும்
உன் கண்களை பார்த்தே யூகித்து கொள்கின்றேன்
உன் நிலையை



கவிஞர் டிரோன்-மருளபி, இலங்கை

# நட்பு

காலம் கடந்தும் எந்நாளுமே தொடர்ந்தாலும்
அதற்கென்று நட்பன்று பெயராக சூட முடிவதில்லை
ஏதோ ஒன்றில் ஏதோ ஒன்றுக்காக
பேசினால் மட்டும் நட்பாகுவதில்லை
மனதின் தோன்றும் யாவையும்
வெளி பூச்சு இன்றி பேச வைக்கும் உணர்வைத் தந்து
எம்மை தூக்கி நிறுத்தும்   எண்ணத்தை தரும்
எவரில் தோன்றிடுமோ அவரிலிருந்துதான்
பயணிக்க நினைக்கும் நட்பு

சில பொழுதுகளில் நெருக்கம் தந்து வருத்தங்கள் போக்கின
ஒன்றுக்காக அதென்றும் நட்பன்று நினைய வேண்டாம்
பாதியில் வந்து மீதம் இல்லாமல் மொத்தத்தையும் தெரிந்து விட்டு
முகசலித்து பாதியிலே விட்டு செல்லலாம்
நிற்கதியில் நிற்க வேண்டும் அவர்களின் அன்பை எதிர்பார்த்து
நாம் நம்மை இழக்க நேரிடும் ஏமாற்றம் தருவதல்ல நட்பு
ஏமாந்தவற்றிலிருந்தும் எம்மை மீட்டெடுத்து
ஒன்றுமில்லை என்றாக்கிடுவது தான் நட்புக்கு சிறப்பு

நினைத்ததுடன் வரும் அழைப்புகள் கூட
சிறந்த நட்பின் பிரதிபலிப்புதான்
நான் இருக்கிறேன் என்று சொன்னவர்கள் எல்லாம்
சில கணத்தில் காணாமல் போகக்கூடியவர்கள்
அப்படிச் சொன்னதுடன் அக்கணத்தில் ஆத்ம திருப்திதான்
ஆனால் அவ்வாறு அல்ல
நிலை பெறாத ஒன்று கூட சில கணங்கள்
உறுதி போன்ற நிலையில்   நிற்பதில்லையா

அது போன்று எம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளாமல்
உடனுக்குடன் ஒப்புவித்து எம்மை
நாமே அவர்களிடம் தொலைக்க வேண்டாம்
படரும் கொடி சுற்றிக்கொள்ள ஆதாரமாய்
ஏதோ ஒன்றை தேடுவது போல
எம்மை நாமே பழக்கி விட்டு அவர் இல்லை என்ற போது
எம்மை நாமே தொலைக்க முன்னேறிக்கொண்டிருந்தோம்
அவர்களின் விலகளில் புரிய வைத்திருக்கும்

கண்டுக் கொள்ளாதவர்களைக் கடந்து வர
எம்மை நாம் பழக்கி வைத்திருப்போம்
நட்பென்றது சுகமானது தாய் கரு போல
சரியானதைத் தேர்வு செய்வோம் அனுபவத்தால்



கவிஞர் சுஹ்னாஸ் பேகம், இலங்கை

# அடுத்ததை நோக்கி

அடுத்து என்ன?
எனும்
கேள்வியில் தான்
நகர்ந்து கொண்டிருக்கிறது
பலரின் நாட்கள்
அடுத்தை நோக்கி.



கவிஞர் கீர்த்தனா பு, திருப்பூர் மாவட்டம்

# அவன்



அவளது கனவுகளுக்கு
அவனே கண்கள் ஆகின்றான்.
அவளது புன்னகைக்கு
அவனே பிண்ணனி ஆகின்றான்.

அவளது ஆசைகளுக்கு
அவனே அடைக்கலம் ஆகின்றான்.
அவளது எண்ணங்களுக்கு
அவனே உயிர் ஆகின்றான்.

அவளது மொழிகளுக்கு
அவனே உயிர்க்குறி ஆகின்றான்.
அவளது கவிதைகளுக்கும்
அவனே தலைப்பும் ஆகின்றான்.

அவளை சிறகு விரித்துப் பறக்கச் செய்ய
அவனே அவளுக்கு புது வானம் ஆகின்றான்.
அவள் பறக்கும் அழகை இரசிக்க
அவனே அதன் இரசனையும் ஆகின்றான்.

அன்பென்றால் என்னவென்று
தேடித் தேடி தோற்றுப் போனவள் அவள்;
அகராதியில் அன்பென்ற சொல்லின்
அத்துனை கருத்தையும் வெட்டி விட்டு
அவன் பெயரை எழுதிக் கொண்டாள்.

கவிஞர் பாத்திமா ஹகீமா அமீனுதீன், ஓட்டமாவடி


# நான்–கண்ணீர்–தனிமை

நான் கடந்துபோகிறேன்
கடந்துபோகிறேன்
எல்லாவற்றையும் மறந்து
கடந்துபோகிறேன்
கடந்து போகிறேன்
கடந்து போகையில்
இழப்புகள் எண்ணி
நான் உடைந்து போகிறேன்
உடைந்து போகிறேன்
உடைந்து போகையில்
கண்ணின் நீரருவியில்
நான் நனைந்து போகிறேன்
நனைந்து போகிறேன்

கண்ணின் நீரைத்
துடைக்கும் இதயமெங்கே
இதயமெங்கே

கண்ணின் நீர்கண்டு
துடிக்கின்ற இதயமெங்கே
இதயமெங்கே

யாருமற்ற பாலையில்
நடந்து போகும்
உணர்வில் வீழ்கிறேன்
கைபிடித்து நானிருக்கேன்
சொல்லும் இதயமெங்கே
இதயமெங்கே



"யாரிடமும் எதையும்
எதிர்பார்க்காதே சுதந்திரமாய் இரு"
சுவாமி விவேகானந்தர்-
வரிகளை துணையாக்கி
தனிமையில் ஆழ்கிறேன்
தனிமையில் ஆழ்கிறேன்
என் எழுத்துகளால் வாழ்கிறேன்
என் எழுத்துகளால் வாழ்கிறேன்

கவிஞர் செ. இலட்சுமணக்குமார், ஈரோடு

# நம்பிக்கை

பூவாக இருந்தாலும்
அதில் வாசனை
இருந்தால்தான்
அழகு.

நட்பாகவே இருந்தாலும்
அதில் நம்பிக்கை
இருந்தால்தான்
அழகு.

நம்பிக்கை
நார் மட்டும் - நம்
கையில் இருந்தால்
உதிர்ந்த பூக்களும்
ஒவ்வொன்றாய் வந்து
ஒட்டிக் கொள்ளும் .

கழுத்து
மாலையாகவும்
தன்னைத்தானே
கட்டிக் கொள்ளும்.

நாளைய பொழுதே
நம் கையில் இல்லாத போது
நம்பிக்கையே இவ்வாழ்க்கையை
வாழ வைக்கிறது.



கவிஞர் திருமதி மோகன், நாவலப்பிட்டி (இலங்கை)

என் எழுத்துக்களை வைத்து நான் இன்ன சாதி யென்றும், குடியிருப்பு மற்றும் தொழிலை வைத்து ஒரு சாதியாகவும், உடன் பயணிக்கும் தோழர்களை வைத்து ஒரு சாதியாகவும் என்னை கணிப்பார்கள்.

அப்போது அவர்கள் என் சாதியைத் தெரிந்து கொள்ள எடுத்துக்கொள்ளும் முயற்சிகளை பலமுறை இரசித்திருக்கிறேன். வெறுத்துமிருக்கிறேன்.

இந்திய சமூகம் அவ்வளவு எளிதில் மாற்றிட முடியாதது என எண்ணம் மேலிடவே செய்கிறது.

சாதியெனும் மாய வலை
சிக்கியிருப்பது தெரியாமலே சீரழிக்கிறது
திருத்தலாகா சமூக உலை

"லிமர்புன்" #ராஜூ ஆரோக்கியசாமி

கவிஞர் ராஜூ ஆரோக்கியசாமி, பிச்சாண்டார் கோவில்

# மர ஓவியம்

கருவறை
தூரிகைகள்
பிரசவிக்கும்
பெருங்காடு

ஊமை மொழி
புதிர் போட
கற்பனைகளின்
காற் சதங்கை

அசையா
இலைகள்
வளரா
மரங்கள்

வண்ணங்கள்
வார்த்தெடுத்த
பசுமைக்கு
பஞ்சமில்லை

பயத்துடன்
பார்க்கிறேன்

நெடுந்தூரம்
இருக்கிறது
இதன் பெயர்
காடு என்று,

அடையாளப்படுத்தும்
அவலத்துடன்,
சாம்பல் மேடுகள்
கடக்கும்
சாபம் வருமோ?

அறிமுகமே
இல்லாவிடினும்
சக மனிதனின்
மரத்திற்காக
வேண்டிக் கொள்ளுங்கள்
மழை வரட்டும்.



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# துன்பம் நேர்கையில்



வாழ்க்கைப் பயணத்தில்
வந்திடும் வலிகளே
தாழ்வு இன்றியே
தன்னம்பிக்கையோடு கடந்திடு

இன்ப துன்பம்
இணைந்து தொடரும்
என்றும் தளராதே
எப்போதும் மனமே

பலம் வேண்டும்
பலதும் சாதிக்க
களம் கண்டாலும்
கலங்காது நின்றிடு

துன்பங்கள் வாட்டித்
துவளச் செய்திடும்
இன்பத்தை தேடி
இனித்து வாழ்ந்திடு

உழைப்பே உன்னை
உறவுகளிடம் உயர்த்திடும்
சலிப்பே இல்லா
சஞ்சலம் போக்கும்

வெற்றியும் தோல்வியும்
வெகுதூரம் இல்லை
பற்றோடு நடந்தால்
பலதும் இனிமை

எதையும் தாங்கி
எதிர்கொள்ள வேண்டும்
கல்லுக்குள் விதையாய்
வீறுகொண்டே யெழு

வருபவை வரட்டும்
வழிகளும் கிடைக்கும்
வருந்திடா மனமே இன்பங்கள்
வசந்தமாய் உறவாடும்

கவிஞர் கிருஷ் அபி இலங்கை

# கரையோரக் கனவுகள்


கிடைத்ததில் தொலைந்ததை
தேடி தொலையாமலிருக்க

மீண்டும் மீண்டும்

நொடிக்கொரு
விழி கடத்தலில்
காட்சிகள் பின்னிழுக்கும்
நிகழ்வாழ்வின் மிச்சமொன்று

திரும்பி வாராத காலமழை
திருத்த இயலா பக்கங்களின்
மீள் வரிகள்

கரையோர அலைகளின்
சிறு மிதப்பில் நனையும்



கவிஞர் ஜெயப்பிரபா, சென்னை 81

# விலை போகாத ஆசைகள்

வான்முட்டும் ஆசை
நகைத்த மனம்
கேள்விகள் வரிசையில்
கிளைகள் அசைந்தாடும்
கருத்த மேகத்தாரை
காணாத கனவுகள்
கண்ணிமை வெடிப்புகள்
நீர்தாரை கோலங்கள்
கரை விளிம்பில் கன்னிகள்
வரதட்சனை படிக்கட்டுகள்
வழுக்கும் வாஸ்துகள்
சாளரம் சிரிப்பிலே
வெற்றிலை வீம்பு பேசுது
சுண்ணாம்பு தீண்டலில்
விசும்பி தள்ளிடும் மனம்
வேப்பங்காற்றின் நிழல்
புளித்த கதைக்கூட்டில்
கண்ணம்புகள் எய்தும்
கற்பனைச் சிறைக் கைதிகள்
மூடுமந்திர ரகசியங்கள்
முள்ளங்கி பத்தை பணம்
கல்யாண கதவுகள்
விலை பட்டியலில்
விரல் நெட்டியடுத்தது



கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன், திருப்பூண்டி

# இராமன்



ஈடு இணை இல்லாத தலைவன்
ஜகம் புகழும் புண்ணியவான்
பத்து அவதாரங்களில்
ஏழாவது அவதாரமாக வந்த திரு அவதாரம்
ஒரு வில், ஒரு சொல், ஒரு இல்
என்று தரணியில் வாழ்ந்து காட்டிய மாபெரும் உத்தமன்.
தவத்தால் தசரத சக்கரவர்த்தியின் மகனாக பிறந்து
வசிஷ்டரிடம் கலைகள் பல கற்று
விஷ்வாமித்திரரின் அழைப்பை ஏற்று
தாடகையை வதம் செய்து பின்பு
யாகத்தை பூர்த்தி செய்து
காட்டில் நடந்து கல்லாக
இருந்த அகலிகை பெண்ணாக மாற்றி,
மிதிலையில் சிவ தனுசை வளைத்து
சீதையை மணந்து அயோத்தி சென்று
கைகேயின் சூழ்ச்சியால் தசரதனின் வரத்தால்
சீதை லட்சுமணன் உடன் கானகம்
14 ஆண்டுகள் சென்றான் ராமன்.

குகனை சந்தித்து நண்பனாக
ஏற்று ஐவரானோம் என்றான்.
குடிலில் இருந்த சீதையை சூர்ப்பனகை கண்டு
அவள் அண்ணனான இராவணனிடம்
அவளின் அழகையே வர்ணித்தாள்.
மோகம் கொண்ட ராவணன் சீதையை கவர்ந்து
இலங்கையில் சிறை வைத்தான்.
இங்கே சுக்ரீவனின் நட்பால்
வாலியை வதம் செய்து
அனுமனைக் கண்டு அவனை
தென் திசை நோக்கி பயணப்படச் சொல்லி.

சீதையை கண்டான் அனுமன்.
கண்டேன் சீதையை என்று அனுமன் சொல்ல
மகிழ்ந்தான் ராமன்
மாபெரும் வானர படையோடு கடலைக் கடந்த பின்
ராமன் இலங்கையை அடைந்தான்.
மாபெரும் யுத்தத்தில் வெற்றியும் கண்டு
சீதையை அழைத்து தீக்குளிக்க செய்தான்.
அவளின் கற்பு புனிதமானதால் மலர்களாக சொரிந்தன.
நாடு திரும்பிய ராமன் தீயில் விழ இருந்த பரதனை
அனுமனின் மூலம் காப்பாற்றி அயோத்தி வந்து
சுபிட்சமாக நடந்தது ராமனின் பட்டாபிஷேகம்.

கவிஞர் ஆ.கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

# மாலவனும்வைணவமும் பகுதி 30

## பெரியாழ்வார் தொடர்ச்சி 13

பெரியாழ்வார் பிள்ளைத்தமிழ் போன்றமைந்த சிலவற்றை
ஈண்டுகாண்போம் ! குமரகுருப ரர்யாத்த மீனாட்சி
முத்துகும ரிரண்டுண்டு! பகழிக்கூத் தர்தந்த
செந்தூரார் பற்றியது! மீனாட்சி சுந்தரனார்
சேக்கிழாரைக் குறித்ததுவே! பண்டாரம் திருமலையின்
முருகன்மேல் வட்டித்தது! அன்பானந் தர்படைப்பு
மறைமலையடி பற்றியது! ஒட்டக்கூத் தர்கண்ட
குலோத்துங்கர் பேரமைவு! சிவஞான முனிவரவர்
கலசைசார் செங்கழுநீர் வினாயகரைப் பற்றியதே!
இரட்டணையார் நாராயணர் திரௌபதிமேல் பாடியது!
சொர்ணபுரி அம்பிகைமேல் யாத்ததுவே! என்றமைந்த
பத்தோடு பெண்பாற்கு எழுபத்து நான்கோடு
ஆண்பாற்கு நூற்றெட்டும் என்பனவாய் ஒருநூற்று
தொண்ணூற்று இரண்டாகும்! பட்டியலிடில் கூடிடுமே!
பெரியாழ்வார் முற்றிற்று! ஆண்டாளைக் காண்போமே!



கவிஞர் கணக்காயன் (இ.சே.இராமன்)

# சிவக்கும் கரங்கள்

கடப்பாறை கையேந்தி
கல்லுடைத்து கறடுடைத்து.
களைபிடுங்கி தழைவளர்த்து
பிழைதிருத்தி பிணக்கழித்து.

ஊருக்கே உலைபோட்டு
உடலுக்கு விலைபோட்டு.
காமுத்துக்கு நகைபோட்டு
கத்திக்கு கூர்போடும்.

கரங்கள் யாவுமே
காய்ச்சிய கரங்களே.
அவைகள் எல்லாம்
குருதியின் நிறங்களே.

அனலோடு புனலாடி
புவியோடு சுழன்றாடி.
இரவுவோடு பகலாகி
நாளொன்று உருவாகி.

நிலவிற்கு ஒளிகொடுக்கும்
கதிரவன் கரங்களே.
மார்கழி நீராடி
மணவாளனை குளிப்பாட்டி.

மருதாணி கரம்பூசும்
மங்கையரின் கரங்கள்.
அவை சிவந்த கரங்களே.



கவிஞர் கோ. தனுசன், மட்டக்களப்பு (இலங்கை)

# இரண்டாமிரவில் உடையும் ஆசையணை

அந்திச்சூரியச் சிமிழைத்
தொட்டுத் தொட்டு
உடலெல்லாம் பூசி நீராட
திறக்கும் மாசியிரவுக் கதவு

பூத்திருக்கும் நட்சத்திரங்களை எல்லாம்
கோர்த்துக் கோர்த்து
நான்கடி ஒற்றைச்சடையில் சுற்றுகையில்
காலியாகிப்போன வானம்



முழுநிலவு பொடியை
வெண்மேகத்தால் தொட்டுத் தொட்டு
முகத்தில் பூச பூச
ஒளிரும் பிரம்மக் கமலம்
வெட்கத்தை அவிழ்த்துக்
காமத்தை உடுத்திக் கொள்ள
கதவைத் தட்டும் மின்மினி

அசைவ விருந்தையும் ஆசைகளையும்
அள்ளித் தின்று
திருமண அசதியைத் தூக்கித்தெறிந்து
இரண்டாமிரவை முதலிரவாக்க
காத்திருக்கும் மாப்பிள்ளைக்கழுந்து.

கவிஞர் ஸ்ரீவி. முத்துவேல், சென்னை

# இயற்கையை காப்போம்

ஆறு கரைத் தொட்டு
ஏரி குளம் எல்லாம் நீர் நிரம்பி

காடு கரையெல்லாம்பச்ச பசுமையா
வெள்ளாம விளைஞ்ச காலம்

மாதம் மும்மாரி மழை பொழிந்த காலம் போய்
காடு கரையெல்லாம் கரம்பா போன கதை

கண்ணு கலங்குதே தோப்பு தொறவுன்னு
பசுமையா வாழ்ந்த ஊரு இப்போ
மரம் எல்லாம் போச்சு
கான்கிரீட் காடா கட்டடங்கள் முளைச்சிடுச்சு

ஒதுங்க இடம் இல்லை வெக்கையில வேகுறோம்



கவிஞர் ஜேப்பி. பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு

"சுவேதா இப்போது திருமணம் செய்துவிட்டு உடனடியாக நான் மட்டும் குவைத் போனால் எப்படி இருக்கும்"
"பைத்தியக்காரத்தனமாக இருக்கும். அதற்கு திருமணமே செய்யாமல் இருந்திருக்கலாம் என்று தான் நினைப்பு வரும்"
அதனால் தான் உனக்கு மூன்றுமாத விசிட்டிங்க் விசா வாங்கி வந்திருக்கிறேன். நாம் இருவரும் ஹனிமூன் கொண்டாடிய மாதிரியும் இருக்கும்.அத்தோடு உன்னைத் தனியாக விட்டு விட்டு அங்கே போய் எண்ணெய்க் கிணத்தில் உன் முகம் பார்த்து விரகத்தோடு, வேலை செய்த மாதிரியுமிருக்காது. அதனால் தான் நம் ஹனிமூன் குவைத்திலுள்ள தஸ் மன் பிளாட்டில்லே என்றேன்"
"ஆமாம் அங்கே என்னை அறையில போட்டு ஜெயில் கைதி மாதிரி பூட்டி வைத்துவிட்டுப் போய் விடுவீர்கள் தினமும் இரவில் தான் உங்களை பார்க்க முடியும்"
அப்படியில்லை சுவேதா நீ அங்கே வந்துவிட்டால் அடிக்கடி விடுமுறை போட்டுக்கொண்டு ஒருசில பிக்னிக் பாய்ண்டுகள் போய் வரலாம், குவைத் நண்பர்கள் வீடுகளுக்கு சென்று வரலாம். அவர்களை அழைத்து நமது திருமண விருந்து கொடுக்கலாம்.



"அப்போது உனக்கும் நேரத்தைப் போக்குவதற்கு வசதியாக இருக்கும்"
"ஆமாம். குவைத்தில் எனக்கு எதுவும் வேலை பார்க்க முடியாதா?"
"முயற்சிக்கலாம்"
"நாம் குடும்பத்தோடு அங்கே தங்க முடியாதா ?"
"அதற்கு விசா எடுக்க வேண்டும் அத்தோடு ஊரிலே இருக்கும் என் அப்பா அம்மாவை யார் கவனித்துக் கொள்வது?"

திரு இராஜகைநிலவன், மும்பை

# ஆகாயத்தில்

## சிறு நவீனம்

## அத்தியாயம்-3B



"உங்களுக்கு மனைவியாக இருக்கவா அல்லது வீட்டுக்கு வேலைக்காரியாக்கவா என்னைக் கல்யாணம் செய்து கொண்டீர்கள்"

"வீணாக திருமணமான மூன்றாவது நாளே சண்டை போட வேண்டாம். விமானத்திற்கு நேரமாகிவிட்டது. இப்போது கார் வந்துவிடும் சீக்கிரம் எல்லாம் எடுத்துஅடுக்கி வை"

"எனக்கு நீங்கள் ஓர் உறுதி சொல்ல வேண்டும்"

"அங்கே எனக்கு வேலை கிடைக்காவிட்டாலும், எப்படியாவது விசா எடுத்து நான் உங்களோடு தங்கிவிட விட வசதி செய்ய வேண்டும்." "சும்மா ஊரிலே இருக்கும் என் அப்பா அம்மாவை யார் கவனித்துக் கொள்வது என்று சீனெல்லாம் போடக்கூடாது" " பின்னே இந்த இழுபறியெல்லாம் வேண்டாம். கண்டிப்பாக விசா வாங்கி செட்டில் செய்கிறேன் என்று சொல்லுங்கள்"என்றாள் ஸ்வேதா.

அவன் "சரி" என்று சொல்லவும் வாசல் கதவு மணி சப்தம் கேட்கப் "போய் பார்" என்றான் "சுவேதா குவைத்திற்கு புறப்பட்டாகிவிட்டதா" கதவைத் திறந்ததும் சுவேதாவின் அப்பா கேட்டார். "வாங்க அப்பா. அம்மா வரவில்லையா?" என்றாள் சுவேதா "அம்மா ஏர்ப்போட்டிற்கு நேரடியாக தம்பி தங்கைகளுடன் வருவதாகச் சொல்லி இருக்கிறாள்"

"சரி வாங்க கார் வருவதற்காகதான் காத்திருக்கிறோம்.. காப்பி தருகிறேன் குடியுங்கள். நாங்களும் புறப்பட்டு ஏர்ப்போட்டுக்கு எல்லோரும் சேர்ந்து போய்விடலாம்"

"மாப்பிள்ளை எங்கே?"

"மேலே பேக் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். வரச்சொல்லுகிறேன்" என்று சமையலறையை நோக்கிக் கிளம்பினாள்.


...தொடரும்

திரு இராஜகைநிலவன், மும்பை

# விதியின் விளையாட்டு



## சிறுகதைத் தொகுப்பு




சிறுகதை என்ற சொல் சிறியதுதான் ஆனாலும் அதன் செயல்வடிவம் மிகவும் பெரியது. உட்பொருள் பெரிதாக இருந்தாலும், அதைச் சுவையாகவும், சுருக்கமாகவும் எழுதி விளங்க வைப்பதுதான் சிறுகதையின் சிறப்பு. அத்தகைய சுவை மிகுந்த சிறுகதை நூலாக இந்நூலாகப் பார்க்கிறேன்.

"விதியின் விளையாட்டு" - (சிறுகதைகளின் தேரோட்டம்) என்னும் அருமையான தலைப்பில் சிறுகதை எழுதிய எழுத்தாளர் சிறுகதைச் சிகரம் திரு. இரஜகை நிலவன் அவர்களின் சிறுகதை நூல் பல்வேறு தலைப்புகளில் எழுதப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது.

"சந்திப்பு" என்கிற சிறுகதை மருத்துவரான ஜெனிபர் - ராசையா சந்திப்பு, நினைவுகள் முடிவு அழகாக எழுதப்பட்டுள்ளது.

"எல்லாம் உனக்காக" சிறுகதையில் பெண் பார்க்க வந்த மாப்பிள்ளை சங்கர் அதிர்ச்சியில் கவிதா என நம்மையும் மூழ்க வைக்கிறார் ஆசிரியர்.

"மயக்கமா? கலக்கமா?" "நினைவுகளைத் தேடி", "விசித்திரமான வாழ்க்கை" என்று பல நல்ல தலைப்புகளிலும்,


கணவன் வசந்தன், மனைவி பத்மினி இடையில் புவனா - "தீபாவளி" தலைப்பிலும் எழுத்தாளரின் திறமை வெளிப்படுகிறது.

*திரு ப. பன்னீர் செல்வம், செங்கல்பட்டு*

"என்னைக் காணவில்லை", "சொல்லாத காதல் செல்லாது" காதல் பற்றிய எழுத்தாளரின் அழகியல் தெரிகிறது.

நூலின் பெயரான "விதியின் விளையாட்டு" தலைப்பில் சூரி காதலித்த விஜயா அண்ணியானதால் தவிக்கும் சூழலில் தாயாக நினைப்பதாகக் கூற சிறுகதை செல்லும் விதம் சிறப்பு.

மிகவும் சிறப்பான சிறுகதை நூலை வெளியிடும் சகோதரர் இரஜகை நிலவன் அவர்கள் தமிழுக்குத் தொடர்ந்து தொண்டாற்ற வேண்டும் என்றும் மேலும் பல நூல்களை வெளியிட வேண்டும் என்றும் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.




*திரு ப. பன்னீர் செல்வம், செங்கல்பட்டு*


# பிரபஞ்சம் அளந்த பெண்கள் பெண் வானவியலாளர்கள்

## புத்தக அனுபவங்கள்

பேராசிரியர் சோ மோகனா
முதல் பதிப்பு பிப்ரவரி 2024
பக்கம் 160 ; விலை ரூ160
வெளியீடு புக்ஸ் ஃபார் சில்ரன்

நூற்றுக்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியவர்; பெண் விஞ்ஞானிகள் குறித்தும் பெண் கணிதவியலாளர்கள் குறித்தும் அதிக கட்டுரைகள் எழுதியவர்; பெண்களைப் பற்றிய நிறைய நூல்களை வெளியிட்டவர். 36 ஆண்டுகால விலங்கியல் துறை பேராசிரியராக பணியாற்றியவர்; கல்லூரியில் பொறுப்பு முதல்வராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்; தமிழ்நாடு அறிவியல் இயக்கம் மற்றும் இந்திய அறிவியல் கூட்டமைப்பில் செயற்குழு உறுப்பினராக உள்ளவர்; தீண்டாமை ஒழிப்பு முன்னணியில் மாநில செயற்குழு உறுப்பினர்; ஓய்வுக்குப் பிறகு துப்புரவு தொழிலாளர்கள் மற்றும் சிகை தொழிலாளர்கள் மத்தியில் தொடர்ச்சியாக பணிபுரிபவர் என பல்வேறு திறன்களுடன் செயல்படும் பேராசிரியர் சோ மோகனா அவர்களின் பெண் வானவியலாளர்கள் பற்றிய கட்டுரைத் தொகுப்பு.

உலகில் மனிதன் தோன்றிய காலம் தொட்டு இன்றுவரை அவனது பயணத்திற்கு வழித்துணையாக அமைவது வானமும் அதன் உபபொருட்களும் எனலாம். வானியல் துறையில் ஏற்படும் மாற்றங்கள் மனிதனின் நகர்வை அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்வதில் உதவி செய்கின்றன.




விவசாயத்தைப் போலவே வானவியலும் மனிதனின் ஆதி காலம் தொட்டு அவனுக்கு உதவி செய்யும் ஒரு துறையாக விளங்கி வருகிறது. கோள்கள், நிலவு, நெபுலாக்கள், நட்சத்திரங்கள், வால் மீன்கள், விண்கற்கள், சிறு கோள்கள், குள்ளக்கோள்கள் என வானம் தனக்குள் லட்சக்கணக்கான புதையல்களை வைத்துக்கொண்டு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான ஆச்சரியங்களை நமக்கு அள்ளித் தருகிறது.

திரு இளையவன் சிவா

## புத்தக அனுபவங்கள்

பண்டைய காலம்தொட்டு வானத்தை ஆராய்ச்சி செய்திட ஆண்களை விட பெண்களுக்கான ஆர்வம் அதிகம் இருந்தது என்பதை நிறையச் சான்றுகள் உறுதி செய்கின்றன. வானியலின் மீதான பெண்களின் ஈர்ப்பும் அத்துறையில் பெண்கள் செய்த சாதனைகளும் இன்றுவரை முழுமையாக தொகுக்கப்படவில்லை. பொதுவாகவே விஞ்ஞானிகள் என்றாலே ஆண்களை மட்டுமே அளவிடும் பொதுப்புத்தியில் பெண்களும் விஞ்ஞானிகளாக ஆய்வியல் அறிஞர்களாக புதிய புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியவர்களாக உலகில் சிறந்து விளங்கி இருக்கின்றனர் என்பதை ஆவணப்படுத்துவதில் சுணக்கம் காட்டுகின்றோம்.

உலக அளவில் பெண் வானியலாளர்கள் என எண்ணற்ற விஞ்ஞானிகள் இருந்தாலும் அவர்களில் சிறப்பான சேவை புரிந்தமைக்கான 13 விஞ்ஞானிகள் பற்றிய கட்டுரைத் தொகுப்பில் பேராசிரியர் அவர்களைப் பற்றிய முழுமையான வாழ்க்கை வரலாற்றையும் அதன் வழியே வானியலில் அவர்கள் நிகழ்த்திய சாதனைகளையும் பட்டியலிடுகிறார்.

அறிவியலும் மதமும் அன்றைய காலகட்டத்தில் ஒன்றுக்கொன்று முரண்பட்டு நின்ற நேரத்தில் அறிவியலின் வழியே வானத்தையும் உலகத்தையும் அதன் போக்கையும் அளந்து கட்டுரைகளாகவும் நூல்களாகவும் எழுதி இருக்கும் கணித மேதை ஹைபேஷா மீது மதமும் துறவிகளும் மேற்கொண்ட அதிகார துஷ்பிரயோகம் அவரது உயிரை எவ்வளவு கீழ்த்தரமாக பறித்தது என்பது பற்றிய முதல் கட்டுரையே நம்மை நடுங்க வைக்கிறது. உயிருடன் தோலை உரித்து கை கால்களை தனித்தனியே பிய்த்தெறிந்து கற்களைக் கொண்டு அவரை வீழ்த்திய மதவாதிகளின் ஆவேசம் அறிவியலின் மீது எறியப்பட்ட விரும்பத்தகாத ஆயுதம் என்பதை கட்டுரை கோடிட்டு காட்டுகிறது.

தனது வாழ்நாளில் எட்டு வால்மீன்களை கண்டறிந்தவர் பல நூறு ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் இருக்கும் ஏராளமான நெபுலாக்களை கண்டுபிடித்து அவற்றை தொகுப்பித்தவர் முதல் முறையாக வால்மீனைக் கண்டறிந்த பெண்மணி என்ற சிறப்பை பெற்றவர் அரசாங்கத்தின் மூலம் முதன்முதலில் பணியும் ஊதியமும் பெற்ற முதல் விஞ்ஞானி என்ற பல்வேறு சிறப்புகளுக்கு சொந்தக்காரரான கரோலின் ஹெர்சல் தனது சகோதரருடன் இணைந்து பல நெபுலாக்களை தொகுத்து இருக்கிறார்.

*திரு இளையவன் சிவா*

## புத்தக அனுபவங்கள்

நெப்டியூன் கோளைக் கண்டுபிடிப்பதில் முக்கிய பங்கு வைத்தவர் யுரேனஸின் நிலையை கணக்கிடுவதில் உள்ள சிரமங்களை கண்டறிந்து நெப்டியூன் கோளின் இருப்பை ஆராய்ச்சி செய்வதற்கு குறிப்புகள் எழுதியவர் இயற்பியலாளர் வேதியிலாளர் தொலைநோக்கு சிந்தனையாளர் என பல்வேறு திறமைகளைப் பெற்றவர் கணித வழி வானவியலாளர் மேரி சோமர்வில்லை.

அமெரிக்க கிளை மற்றும் அறிவியல் அகாடமிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி; அறிவியல் முன்னேற்ற அமெரிக்க சங்கம், அமெரிக்க தத்துவவியல் சங்கம் ஆகியவற்றிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்; பெண்களை கட்டுப்பெட்டியாக வைத்திருந்த சமூக மரபுகளை உடைத்தெறிந்தவர். பெண்கள் அதிக அளவில் வானியல் துறையில் ஈடுபடுவதற்கு பேருதவி புரிந்தவர்.

விண்மீன்களின் நிறமாலைகளின் வகைப்பாடு குறித்த பணியில் ஈடுபட்டு அவற்றிற்கான வடிவத்தையும் தொகுத்தவர் குதிரைத் தலை நெபுலா மற்றும் வெள்ளைக் குள்ளன் ஆகியவற்றைக் கண்டறிந்தவர், 30 நோவாக்கள் 539 வாயு நெபுலாக்கள் மற்றும் 300-க்கும் மேற்பட்ட மாறிலி விண்மீன்கள் ஆகியவற்றை அடையாளம் கண்டவர், விண்மீன்களின் இறுதி நிலையான வெள்ளைக் குள்ளர்கள் என்ற அமைப்பை கண்டறிந்தவர் என்று ஏராளமான சாதனைகளுக்கு சொந்தக்காரர் வில்லியமினா பிளமிங்.

விண்மீனில் என்ன இருக்கிறது என்பதை ஆராய்ந்து ஹைட்ரஜன் மற்றும் ஹீலியம் வாயுக்கள் கூட்டுக் கலவையே விண்மீன் என்பதை தெளிவான தரவுகளுடன் கண்டறிந்து வெளியிட்டவர் சிசிலியா பெயின் கப்போஷ்கின். ஆனால் இவர் ஆரம்பத்தில் படித்த அறிவியல் பாடம் தாவரவியல் என்பது நம்மை வியப்படைய வைக்கிறது.


இந்த நூலில் நிறைய கட்டுரைகளும் நூல்களும் வெளியிட்ட இரண்டு இந்தியப் பெண் விஞ்ஞானிகள் பற்றிய கட்டுரையும் இடம்பெற்றிருப்பது நமக்கு பெருமை அளிக்கிறது. பிரஜ்வல் சாஸ்திரி மற்றும் பிரியம்வதா நடராஜன் இருவரும் இன்றும் வானியல் துறையில் ஏற்படும் மாற்றங்களை கணித்து அது தொடர்பான கட்டுரைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். இவர்களைப் பற்றிய கட்டுரையும் வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் அறிவியலின் மீதான ஈடுபாட்டை அதிகரிக்க உதவும் என்பதில் ஐயமில்லை.

*திரு இளையவன் சிவா*

## புத்தக அனுபவங்கள்

விண்மீன்கள் செயற்கைக்கோள்கள் மற்றும் சந்திர மண்டலத்தில் உள்ள பள்ளத்தாக்குகள் போன்ற பல இடங்களுக்கு பெண் வானவியலாளர்களின் பெயர்கள் சூட்டப்பட்டு இருப்பதை வளரும் தலைமுறை வாசிக்கும் போது அறிவியலின் மீதான ஆர்வமும் புதிய கண்டுபிடிப்புகளை நோக்கி நகரும் திறமையும் அவர்களுக்குள் வளரும் என்பதே இந்த நூலை எழுதிய பேராசிரியரின் முக்கியமான நோக்கமாகும்.

சர்வதேச வானியல் கழகம் குறிப்பிட்டுள்ள 88 விண்மீன் திரள்களில் சுமார் 60க்கும் மேற்பட்ட விண்மீன் திரள்களை அடையாளம் காணும் திறன் பெற்றவர் தமிழகத்தில் இருக்கக்கூடிய மூன்று பெண் வானவியல் நோக்காளர்களில் ஒருவர் என்ற பல்வேறு சாதனைகளை புரிந்தும் எழுத்தின் வழியேயும் தனது செயல்பாடுகளின் வழியேயும் தினம் தினம் வானவியல் துறை தொடர்பான கட்டுரைகளை எழுதுவதன் வாயிலாகவும் வளரும் தலைமுறையினருக்கு புதுப்புது பாதைகளை அமைத்துத் தரும் பேராசிரியர் அவர்களின் பணி இந்த நூலின் வழியாக மேலும் நிறைய சாதனைகளை அவருக்கு கொண்டு சேர்க்கும் என்பது நிச்சயம்.




திரு இளையவன் சிவா

# மு.கதிரேசச் செட்டியார்

## கட்டுரை



**சிறப்பு :** தமிழ் ஞாயிறு" , "மகாமகோபாத்தியாயர்", "பண்டிதமணி", "சைவ சித்தாந்த வித்தகர்", "முதுபெரும் புலவர்"

**காலம் :** 16.10.1881-24.10.1953

**பிறப்பு :**

பண்டிதமணி , மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் மகிபாலன் பட்டியில் முத்துக் கருப்பன் செட்டியார்- சிகப்பி ஆச்சி தம்பதியருக்கு 16.10.1881 அன்று பிறந்தார்

**படிப்பு :**

பண்டிதமணி , மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியவர். தமிழிலும் வடமொழியிலும் புலமை பெற்றவர். ஏழு மாதம் கூடப்பள்ளிக் கூடத்தில் கல்வி பயிலாமல், பன்னிரண்டு ஆண்டுகள் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்து, தமிழ்ப்பணி ஆற்றிய தனிச்சிறப்பு இவருக்கு உரியது.



**பணி :**

1934 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளரான பண்டிதமணி அவர்கள் படிப்படியாக உயர்ந்து இறுதியில் தமிழ் ஆராய்ச்சி துறைத் தலைவராக உயர்வுபெற்றார்.பத்து ஆண்டுகள் சீரிய முறையில் தமிழ்ப்பணியாற்றினார்.

திரு அ வில்சன், இதழாசிரியர்

# மு.கதிரேசச் செட்டியார்

## கட்டுரை


### உயர்நிலை வழிக்காட்டி :

பண்டிதமணி மூன்று வயதில் இளம்பிள்ளை வாதத்தால் தாக்கப்பெற்றார். குடும்பச் சூழல் முறையான கல்வியைப் பெற அவருக்குத் துணை நிற்கவில்லை. பதினான்கு வயதில் பண்டிதமணியின் தந்தை காலமானார். அதே ஆண்டில் அவரது இடது காலும்,இடது கையும் வலுக்குறைந்தன. ஊன்றுகோல் இல்லாமல் நடக்க இயலாது. இவ்வளவு துன்பங்கள் வாழ்வில் அணிவகுத்து வந்தும், அவற்றால் சிறிதும் நிலைகுலைந்து, நெஞ்சம் துவண்டு விடவில்லை அவர். உள்ள உறுதியால் தமது உடற் குறையை வென்றார். தம் முயற்சியால் தமிழும்,வடமொழியும் கற்றார். நடக்க முடியாத சூழ்நிலையில் இருந்ததால், வீட்டில் இருந்துகொண்டே படித்தார். முயற்சியும் மன உறுதியும் இருக்குமானால் உடல் ஊனமுற்றவர்களும் உயர்நிலையை அடைய முடியும் என்பதற்குக் கதிரேசனாரின் வாழ்க்கை எடுத்துக்காட்டாகும்.

### எழுத்துப்பணி

### மொழிபெயர்ப்பு நூல்கள் :

உதயணன் சரிதம், சுலோசனை, மண்ணியல் சிறுதேர், சுக்கிரநீதி, கௌடலீயம் பொருணூல், மாலதி மாதவம், பிரதாப ருத்திரம் , இரசங்காதாரம் முதலிய வடமொழி நூல்களைத் தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார்.




திரு அ வில்சன், இதழாசிரியர்

# மு.கதிரேசச் செட்டியார்



## நூல்கள் :

உரைநடைக்கோவை 1 (சமயம் சார்ந்த கட்டுரைகள்), உரைநடைக்கோவை2 (இலக்கியம் சார்ந்த கட்டுரைகள்), நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு, பண்டிதமணி பாடல்கள்,பண்டிதமணி கடிதங்கள்,பதிற்றுப் பத்தந்தாதி ஆகியவை பண்டிமணி அவர்களின் அரிய நூல்கள்.




தமிழை உயிராகவும், சைவத்தைக் கண்களாகவும் போற்றிய பெருந்தகையாளர் அவர். "கதிர்மணி விளக்கம்" என்ற தலைப்பில் பண்டிதமணி திருவாசகத்துக்கு எழுதிய பேருரையைப் பாராட்டாத தமிழறிஞர்களே இல்லை எனலாம்.

## மறைவு :

பண்டிதமணி கதிரேசன் செட்டியார் இரத்தக் கொதிப்பின் காரணமாக 24.10.1953 அன்று காலமானார்.




திரு அ வில்சன், இதழாசிரியர்

## நாளை நமதே

# சோதிப்பது
# காலமாக இருந்தாலும்
# சாதிப்பது நீங்களாக
# இருங்கள்

அகமும் தமிழே     முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு   அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு   சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



# அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa   www.aagaramuthala.com   aagaramuthala@gmail.com